
## திராவிடத்தால் வாழ்கிறோம்

1309

எழுத்து: கோவி.லெனின்

ஓவியம்: கி.சொக்கலிங்கம்




- வாழ்வோம்

## பொய்ப்பெட்டி

கோவி.லெனின்

126

"கழகம் சந்திக்கும் அவதூறுகள் குறித்த வினாவும் - விடையும்..."

# காமராஜரும் கலைஞரும்.. வரலாறு மறையாது.. மறைக்க முடியாது!

***"காமராஜருக்கு மெரினா கடற்கரையில் இடம் கொடுக்க தி.மு.க. அரசு மறுத்துவிட்டது" என்று சட்டமன்றத்தில் காங்கிரஸ் எம்.எல்.ஏ. தாரகை கத்பர்ட் குற்றம் சாட்டியிருக்கிறாரே?***

அது குற்றச்சாட்டு அல்ல, அவதூறு. அந்த அவதூறுக்குச் சட்டமன்றத்தில் தி.மு.க. தரப்பில், தங்கம் தென்னரசு எம்.எல்.ஏ. தெளிவான பதிலடி கொடுத்தார். எனினும், கலைஞருக்குச் சட்டப் போராட்டத்தின் அடிப்படையில், மெரினாவில் இடம் வழங்க நீதிமன்றம் உத்தரவிட்டு, மெரினாவில் கலைஞருக்கு நினைவிடமும் எழுப்பப்பட்டுள்ள நிலையில், அதனைப் பொறுக்க முடியாத பொறாமை குணத்தினர், பெருந்தலைவர் காமராஜர் பெயரைத் தேவையில்லாத சர்ச்சைக்குள் இழுத்துவிட்டுக் கொண்டே இருக்கின்றனர்.

1975-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் நாள், காமராஜர் இறந்தார். அப்போது, எமர்ஜென்சி காலம். மத்தியில் ஆட்சி செய்த இந்திரா காங்கிரஸ் கட்சி, காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸைச் சேர்ந்த அகில இந்தியத் தலைவர்கள் பலரைக் கைதுசெய்து சிறையில் அடைத்தது. ஜனநாயகத்தைக் குழிதோண்டிப் புதைத்துவிட்டதை நினைத்து மனம் வாடி, உடல்நலன் குன்றிய காமராஜர், தனது அரசியல் குருவான காந்தியின் பிறந்த நாளில் மரணமடைந்தார். அவரது உடலை, தேனாம்பேட்டை காங்கிரஸ் மைதானத்தில் எரியூட்ட, ஸ்தாபன காங்கிரஸ் தலைவர்கள்



நினைத்தபோது, முதலமைச்சரான கலைஞர்தான் காந்தி ஜெயந்தியில் இறந்த காமராஜரை, கிண்டி காந்தி மண்டபத்திற்கு அருகில் தகனம் செய்வதற்கு உத்தரவிட்டு, தானே முன்னின்று வேட்டியை மடித்துக் கட்டிக் கொண்டு, களத்தில் இறங்கி செயல்பட்டார். அங்குதான் காமராஜர் உடல் எரியூட்டப்பட்டது.

இது பற்றி, காமராஜருடைய கட்சியின் சட்டமன்ற மேலவை உறுப்பினராக இருந்த ராஜாராம் நாயுடு பேசியது, அவைக் குறிப்பில் உள்ளது. மெரினாவில் காமராஜருக்கு இடம் கேட்கவில்லை என்று காமராஜரின் அணுக்கத் தொண்டராக விளங்கிய பழ.நெடுமாறனும் பேட்டி அளித்துள்ளார். கிண்டி, காந்தி மண்டபம் அருகே காமராஜரைத் தகனம் செய்ய முதல்வர் கலைஞர் எடுத்த முயற்சிகளை மூத்த காங்கிரஸ் தலைவர் திண்டிவனம் ராமமூர்த்தியும் பதிவுசெய்துள்ளார். பின்னர், அந்த இடத்தில் காமராஜருக்கு நினைவிடமும் அமைத்தார் கலைஞர். அதன் உச்சியிலே, இராட்டை சின்னத்தைப் பொறித்தார்.

பிரிட்டிஷார் இறக்குமதி செய்த அந்நியத் துணியை எதிர்த்து, காந்தி பயன்படுத்தியது இராட்டையைத்தான். அந்த இராட்டைதான் காமராஜரின் ஸ்தாபன காங்கிரஸ் கட்சியின் சின்னம். இந்திரா காங்கிரஸுக்கு அப்போது, பசுவும் கன்றும் சின்னமாக இருந்தது. பின்னர்தான் கை சின்னம் வந்தது. பிரதமர் இந்திராவின் எதிர்ப்பையும் மீறி, இராட்டை சின்னத்தை காமராஜரின் நினைவிடத்தின் உச்சியிலே கலைஞர் வைத்தார். அது மட்டுமல்ல, மெரினா கடற்கரைச் சாலைக்கு, காமராஜர் சாலை என்று பெயர் சூட்டியவரும் கலைஞர்தான்.

1976-ஆம் ஆண்டு ஜனவரியில், தி.மு.க. ஆட்சியை இந்திரா காந்தி அம்மையார் கலைத்து, ஜனநாயகப் படுகொலை செய்தார். 1977-இல் அ.தி.மு.க. ஆட்சி அமைந்தது. சட்டமன்றத்தில் காமராஜர் படம் திறந்துவைக்கப்பட்டது. அந்த நிகழ்வையொட்டி, 'படத்திற்குக் கீழே எழுதுவதற்கு நல்ல வாசகம் வேண்டும்' என்று எதிர்க்கட்சித் தலைவர் கலைஞரிடம் கேட்டார், முதலமைச்சர் எம்.ஜி.ஆர்.

'உழைப்பே உயர்வு தரும்' என்று கலைஞர் தந்த வார்த்தைகள்தான் சட்டப்பேரவையில் உள்ள காமராஜர் படத்தின் கீழே இடம் பெற்றுள்ளது. தற்குறிக் கூட்டணிக்குத் தாவிய தாரகை கத்பர்ட், பேரவையில் கொஞ்சம் நிமிர்ந்து பார்த்தால் வரலாறு தெரியும்.

**...வினா தொடரும்.**

## வெளிச்சத்திற்கு வந்த 100 நாள் அதிர்ச்சிக் கணக்கு!

முந்தைய தி.மு.க. ஆட்சியுடன் ஒப்பிடுகையில், தமிழக வெற்றிக் கழக அரசின் முதல் 100 நாட்களின் நிதி நிலைமை மிகவும் கவலையளிக்கும் வகையில் உள்ளது என, எக்ஸ் தளத்தில் வழக்கறிஞர் நவேஷ் ராஜ் பதிவிட்டுள்ளார். அவரது பதிவிலிருந்து...

"தி.மு.க. 5 ஆண்டு ஆட்சிக்காலத்தில் வாங்கிய கடன் அளவுடன் ஒப்பிடுகையில், த.வெ.க. அரசு ஒவ்வொரு நாளும் ரூ.80 கோடி கூடுதலாகக் கடன் வாங்குகிறது.

பொருளாதாரத்தை மேம்படுத்துவதற்காக, கடன் வாங்குவது தவறான ஒன்றல்ல. ஆனால், அந்தக் கடன் எவ்வாறு பயன்படுத்தப்படுகிறது என்பதில்தான் பெரிய வித்தியாசம் உள்ளது. தி.மு.க.வின் வளர்ச்சிப் பாதை, தி.மு.க. ஆட்சியில் வாங்கப்பட்ட கடன்கள் ஒப்பிடமுடியாத பொருளாதார வளர்ச்சியால் ஈடுசெய்யப்பட்டன.

தமிழகத்தை, இந்திய மாநிலங்களின் வளர்ச்சிப் பட்டியலில் முதலிடத்திற்கும், நாட்டின் ஜி.டி.பி. (GDP) வளர்ச்சியில், பெருமைக்குரிய 2-வது இடத்திற்கும் தி.மு.கழகம் கொண்டு சென்றது. இந்தக் கடன்கள், உலகத்தரம் வாய்ந்த உள்கட்டமைப்புகள், தொழிற்பேட்டைகள் மற்றும் வருவாய் ஈட்டும் திட்டங்களுக்காகப் பயன்படுத்தப்பட்டன. இதனால், மாநிலத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி, 19.24 இலட்சம் கோடியிலிருந்து 36.67 இலட்சம் கோடியாக உயர்ந்தது.

த.வெ.க.வின் அணுகுமுறை, த.வெ.க. அரசு பதவியேற்று வெறும் 100 நாட்களில், நீண்டகால வருவாயை ஈட்டித்தரும் எந்தவொரு உறுதியான திட்டத்தையும் தொடங்காமல், கடன் வாங்கும் வேகத்தை மட்டும், வரலாறு காணாத அளவிற்கு அதிகரித்துள்ளது. முறையான வருவாய் ஆதாரங்கள் இல்லாமல், குறுகிய காலத் தேவைகளுக்காக மட்டும், மாநிலத்தை மேலும் கடன் வலையில் தள்ளுவது, கடந்த ஐந்தாண்டுகளில் தமிழ்நாடு கட்டியெழுப்பிய பிரம்மாண்டமான வளர்ச்சிப் பாதையை முடக்கும் அபாயத்தை ஏற்படுத்தும்.

செல்வத்தை உருவாக்காமல், வெறும் இலவச நலத்திட்டங்களை மட்டும் வழங்குவது, நிதிப் பேரழிவிற்கே வழிவகுக்கும். தமிழ்நாட்டிற்குத் தேவை நிலையான வளர்ச்சிதானே தவிர, கட்டுக்கடங்காத கடன் அல்ல" என்று குறிப்பிட்டுள்ளார்.

## ஃப்ளாஷ்பேக்



ஜெ.ஜவஹர்



### தலைவர் அணிவித்த சால்வை!

1993-ஆம் ஆண்டு, மதுரை தமுக்கம் மைதானத்தில் நடைபெற்ற மண்டல மாநாட்டில், தி.மு.க. மாணவர் அணி சார்பில் சிறப்பாகப் பணியாற்றியதற்காக, முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர், தன் பொற்கரங்களால் எனக்கு சால்வை அணிவித்துப் பாராட்டினார்கள். அன்று அடைந்த அளவில்லா மகிழ்ச்சியுடன் எடுக்கப்பட்ட இந்தப் புகைப்படம், என் வீட்டில் மாட்டப்பட்டு, இன்றும் என்னைப் பெருமைப்படுத்திக் கொண்டிருக்கிறது. அந்த நினைவுகளுடன், 33 ஆண்டுகளாக தல்லாகுளம் வார்டு இளைஞர் அணி அமைப்பாளர், மதுரை மாநகர் மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர், மாவட்ட வழக்கறிஞர் அணி துணை அமைப்பாளர், மாவட்டத் துணைச் செயலாளர், தற்போது தலைமைக் கழகப் பேச்சாளர் எனத் தொடர்ந்து தொய்வின்றிப் பணியாற்றிவருகிறேன்.

**- ஜெ.ஜவஹர், தலைமைக் கழகப் பேச்சாளர், ஜாங்கிட் நகர், மதுரை மாநகர் மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறுகுறிப்புடன் எங்களுக்கு அனுப்புங்கள். அலைபேசி எண் அவசியம்.
அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம்பேட்டை, சென்னை - 600 018.
வாட்ஸ்அப் எண் : 82204-51520
மின்னஞ்சல்: murasolipaasarai@gmail.com

## வலை யோசை



shanmugamchinnaraj

படித்ததில் சிறப்பு

தமிழ்ச் சமூகம் அறிவுச் சமூகமல்ல அவலமானச் சமூகம்...

காமராஜர் பல்கலைக்கழகத்தை அரசுக் கல்லூரியாக மாற்றித்தர வேண்டும். - அந்தத் தொகுதியின் த.வெ.க. எம்.எல்.ஏ.

சோளிங்கர் நரசிம்மர் கோயிலில் அன்னதானக்கூடம் கட்டித்தர வேண்டும்.
- சோளிங்கர் தொகுதி எம்.எல்.ஏ த.வெ.க. கபில்.

பல்கலைக்கழகத்துக்கும் கல்லூரிக்கும் வித்தியாசம் தெரியாத ஒரு எம்.எல்.ஏ.,

தனது தொகுதியிலுள்ள பிரபலமான கோயிலில் 8 ஆண்டுகளாக அன்னதானம் போடுகிறார்கள், பெரிய அளவில் அன்னதானக்கூடம் இருக்கிறது. அதுகுறித்து எதுவும் தெரியாமல், தத்தியாக இருக்கும் எம்.பி.பி.எஸ். படித்த அந்தத் தொகுதியின் எம்.எல்.ஏ.

சட்டமன்றத்தில், 'மன்மத வணக்கம்' எனச் சொல்லி பேசிய த.வெ.க. பெண் எம்.எல்.ஏ. சோசியல் மீடியாவில் கிண்டலாக ட்ரோலானதும் ஏதோ பெரிய அவார்டு கிடைத்ததுபோல் நினைத்து மேடைதோறும் 'மன்மத வணக்கம்' எனச் சொல்லுகிறார்.

இவர்களாவது எம்.எல்.ஏ.க்கள். அமைச்சர் கீர்த்தனா என்பவர் சபையில், மதுரை சின்னப்பிள்ளை 'ஓ-ரிங்' கண்டுபிடித்தாராம் அதனால், பிரதமர் வாஜ்பாய் அவரது காலில் விழுந்தாராம். தமிழ்நாட்டு மக்கள் அனைவருக்கும் தெரியும், அது ஏன்னு? இந்தம்மா சட்டமன்றத்திலேயே அடிச்சிவிடுது. வாய் இருக்குங்கறதுக்காகப் பொய் மட்டுமே சொல்ல வேண்டும்னு ஆதவ் அர்ஜுனா, ராஜ்மோகன், கீர்த்தனா போன்றவர்கள் முடிவு எடுத்திருப்பார்கள் போல.

இந்தக் கூத்துக்களை தினம் தினம் தமிழகமே பார்த்துவருகிறது. த.வெ.க. எம்.எல்.ஏ.க்களுக்கு அரசியல் தெரியவில்லை என்பதைக்கூட ஒப்புக்கொள்ளலாம் ஆனால், தன் தொகுதி, தன் ஊரைப்பற்றிக்கூட குறைந்தபட்சம் தெரியவில்லை. இவர்களைத் தற்குறிகள் எனச் சொல்லக் கூடாதாம்? அதைவிட மோசமான பெயர் இருந்தால் வைக்க வேண்டும். இப்படிப்பட்ட த.வெ.க. தற்குறிகளுக்கு வாக்களித்து எம்.எல்.ஏ.வாக்கிய தமிழக மக்களை நினைத்தால் கோபமாக இருக்கிறது.

தி.மு.க., அ.தி.மு.க.வைப் பிடிக்கல. அதனால, மக்கள் த.வெ.க.வுக்கு ஒட்டுப்போட்டாங்க என, இப்போதும் கம்பு சுத்தும் வேடதாரிகளைப் பார்த்து, 'டேய் போதும்டா முட்டுக்கொடுத்தது' எனச் செவில் மேலயே நாலு அப்பு அப்ப தோன்றுகிறது.

யார், யார் தன் தொகுதியில் வேட்பாளராக நிற்கிறார்கள்? யாருக்கு வாக்களிக்கப் போகிறோம்? எதற்காகப் போடப்போகிறோம் எனத் தெரியாமல் குறைந்தபட்ச புரிதல்கூட இல்லாமல், நடிகர் விஜய் என்கிற சினிமா கவர்ச்சிக்காக வாக்களித்துள்ளார்கள். அப்படி வாக்களித்த ஒவ்வொருவரும் கண்ணாடியைப் பார்த்து துப்பிக்கொள்ள வேண்டும். இந்த மூளையில்லா முட்டாள்கள்தான், 'அண்ணன்தான் அடுத்த பிரதமர்' என்கிறார்கள். தமிழ்நாட்டில் முதல்வராக்கும் அளவுக்கு தற்குறிகள் இருக்கும்போது, இந்தியா முழுவதும் இருக்க மாட்டார்களா என்ன? நாசமாகிப்போன இந்தியா இன்னும் நாசமாக...



சிலுவை

100 நாள்லயே அதலபாதாளம்.

உனக்காக அந்த இயற்கையே இறங்கி வருதுன்னு சொல்லி Reels போட்டவனுங்க இருக்கீங்களாடா?









Senthil Vel




## நல்ஊருக

### தி.மு.க. பொறுப்பை ஏற்க வேண்டும்!

1959-ஆம் ஆண்டு, சென்னை மாநகராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பான்மை இடங்களை தி.மு.கழகம் வென்ற நிலையில், சுயேட்சைகளின் ஆதரவுடன் காங்கிரஸ் 'மேயர்' பொறுப்புக்கு முயன்றது. அப்போது, 'தி மெயில்' பத்திரிகை, 'நிர்வாகப் பொறுப்பை ஏற்க, அண்ணாதுரை நழுவப் பார்க்கிறார்' என்றும், பெரும்பான்மையாக வெற்றிபெற்றுள்ள தி.மு.கழகம் பொறுப்பேற்க முன்வர வேண்டும்' என்றும் தலையங்கம் எழுதியது. மாநகராட்சித் தேர்தல் வெற்றிக்காகக் கடற்கரையில் நடைபெற்ற பாராட்டுக் கூட்டத்தில், அதைக் குறிப்பிட்ட அண்ணா, 'மெயில் பத்திரிகைத் தலையங்கத்தில் உள்ள நல்லெண்ணப் பகுதிக்கு, நன்றி கலந்த வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்' என்றார்.

Published and Printed by Karthikeyan Shanmugasundaram On behalf of Murasoli Trust at Murasoli Achagam, No:180, Kodambakkam High Road, Chennai - 600 034 Editor : Karthikeyan Shanmugasundaram Regn. No.7436, TN/CH (C) 261/24 - 26 RNI No.1244/57 WPP.No.TN/P.M.G. (CCR) W.P.P. 355/24-26. Phone : 044 - 45849900